குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.
முன்னிலை : திருமதி.டி.மாலதி, பி.எஸ்.சி., பி.எல்.,
நீதித்துறை நடுவர், குமாரபாளையம்.

திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் வைகாசி திங்கள் 28 ஆம் நாள்
2024 ம் ஆண்டு ஜீன் திங்கள் 10 ம் நாள் திங்கள்கிழமை

**குற்றவியல் பல்வகை மனுஎண். 928/2023**
**CNR No.TNNM16-002181-2023**
**In**
**சுருக்க வழக்கு விசாரணை எண். 395/2020**
**CNR No.TNNM16-001948-2020**

G.கோபிநாத், (வயது 56/2020),
த/பெ.கோபாலன்,
50 A, மாரியம்மன் கோவில் தெரு,
ஆலாம்பாளையம்,
பள்ளிபாளையம்,
குமாரபாளையம் தாலூக்கா,
நாமக்கல் – 638 008. ... மனுதாரர் / எதிரி

//எதிர்//

D. பாலச்சந்தர், (வயது 46/2020),
த/பெ. தர்மலிங்கம்,
ஸ்ரீ ஹரி டியூப்ஸ் & கெமிக்கல்ஸ்,
37A, கோகுலம் அபார்ட்மெண்ட்ஸ்,
அண்ணாசாலை, வெங்கடபுரம்,
கோயம்புத்தூர் வடக்கு,
கோயம்புத்தூர்.
... எதிர்மனுதாரர்/ புகார்தாரர்

இம்மனு இன்று என் முன்னிலையில் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.அறிவரசன்,B.Sc.,B.L., அவர்களும், எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் திரு. S.புனிதராஜ், B.A.,B.L.,., அவர்களும் ஆஜராகி இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**<u>உத்தரவு</u>**

இவ்வழக்கில் புகார்தாரரை மீண்டும் விசாரணைக்கு (Recall) அழைத்து குறுக்கு விசாரணை செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டி குவிமுச 311–ன் கீழ் மனுதாரர்/எதிரி தரப்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :–**

இந்த மனுவை மனுதாரர் கு.வி.மு.ச.பிரிவு 311–ன்கீழ் தாக்கல் செய்திருக்கிறார்.

புகார்தாரர் ம.சா.1 (PW1) ஆக முதல் விசாரணை செய்யப்பட்டபோது, அந்த நேரத்தில் மனுதாரர்/எதிரிக்கு சில முக்கியமாக ஆவணங்கள் கிடைக்காததாலும், மேலும் அவை தவறாக இருந்ததாலும் புகார்தாரரை மனுதாரர்/எதிரியால் குறுக்கு விசாரணை செய்ய முடியவில்லை. ஆனால் தற்போது மனுதாரருக்கு அவரது வழக்கை நிரூபிப்பதற்கு புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வது மிகவும் அவசியமானதாகவும், நியாயமானதாகவும் உள்ளது.

எனவே ம.சா.1 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணைக்கு உட்படுத்த உத்தரவு பிறப்பிக்க கோரி மனுதாரர்/எதிரி இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறார்.

**3.எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:–**

மனுதாரர்/எதிரியின் மனு பொய்யானதும், மோசடியானதும் ஆகும். சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல.

புகார்தாரர் கடந்த 11.07.2022 ம் தேதியன்று தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு ம.சா.ஆ.1 முதல் 7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. பின்னிட்டு குவிமுச பிரிவு 313(1)(b)–ன் கீழான கேள்வி கேட்கப்பட்ட பிறகு இந்நீதிமன்றம் எதிரி தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் மனுதாரர்/எதிரி இந்த மனுவினை தாக்கல்

செய்திருக்கிறார். புகார்தாரரை திரும்ப அழைத்து விசாரிப்பதற்கான சரியான காரணத்தினையும் மனுதாரர்/எதிரி அவரது மனுவில் குறிப்பிட்டு கூறவில்லை. தேவையான ஆவணங்கள் தற்போது தான் கிடைத்துள்ளது என்று மனுதாரர்/எதிரி கூறியுள்ளது முற்றிலும் பொய்யானதாகும். மனுதாரர் /எதிரி இந்த வழக்கினை இழுத்தடிக்கும் நோக்கத்துடன் இந்த மனுவினை தாக்கல் செய்திருக்கிறார்.

எனவே, மனுதாரரின் மனுவில் சரியான முகாந்திரம் இல்லாத நிலையில் மனுதாரரின் இந்த மனுவை தள்ளுபடி செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்க கேட்டு எதிர்மனுதாரர்/புகார்தாரர் எதிருரை தாக்கல் செய்திருக்கிறார்.

3) மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே தற்போது தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

4) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

5) வழக்கானது கடந்த 11.07.2022ம் தேதி ம.சா.1ன் முதல் விசாரணை முடிக்கப்பட்டு, ம.சா.1ன் குறுக்கு விசாரனைக்காக வாய்தா போடப்படடிருந்த நிலையில் கடந்த 06.03.2023–ம் தேதிவரை ம.சா.1 மனுதாரர்/எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் வழக்கானது அவரது குறுக்கு விசாரணையானது முடிக்கப்பட்டதாக கருதி புகார்தாரர் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டிருந்தது தெரிய வருகிறது. பின்னிட்டு 21.08.2023ம் தேதி புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு வழக்கானது குவிமுச பிரிவு 313(1)(b)–ன் கீழான கேள்விக்கு வாய்தா போடப்பட்டு கடந்த 23.08.2023ம் தேதி 313(1)(b)–ன் கீழான கேள்வி முடிக்கப்பட்டு எதிரி தரப்பு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டிருந்தபோது, மனுதாரர்/எதிரி கடந்த 03.11.2023ம் தேதியன்று இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறார் என்பது தெரிய வருகிறது. மனுதாரர்/எதிரி ஏறத்தாழ 8 மாதங்களாக ம.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்து வந்த நிலையில் கடந்த 03.11.2023ம் தேதியன்று அவரது தரப்பில் ம.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டி குவிமுச பிரிவு 311–ன் கீழான மனுவினை

தாக்கல் செய்திருக்கிறார் என்பதும் தெரிய வருகிறது. மனுதாரர் தரப்பில் ஏறத்தாழ 8 மாத காலமாக ம.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்த போதிலும், மனுதாரருக்கு அவரது வழக்கை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு வழங்க வேண்டியது நீதியின்பால் உகந்ததாகும்.

மனுதாரர்/எதிரி ம.சா.1–ஐ உரிய நேரத்தில் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தவில்லை என்றாலும் கூட, எதிரிக்கு அவரது வழக்கினை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு வழங்க வேண்டியது நீதியின்பால் உகந்தது என்பதாலும், இந்த வழக்கும் தற்போது எதிரி தரப்பு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டிருப்பதாலும், எதிரிக்கு தனது எதிர்வாதத்தை நிரூபணம் செய்ய வாய்ப்பளிப்பதற்காக ம.சா.1 ஐ மீண்டும் அழைத்து விசாரிக்க உத்தரவிடலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. முடிவாக இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆனால் அதே வேளையில் மனுதாரர்/எதிரி ஏற்படுத்திய காலதாமதத்திற்காக மனு செலவுத்தொகையாக ரூ.700/–ஐ 17.06.2024–ம் தேதிக்குள் மனுதாரர்/எதிரி செலுத்த வேண்டும் என்றும், தவறினால் மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக, இம்மனு ரூ.700/– செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகையை மனுதாரர்/எதிரி, எதிர்மனுதாரர்/புகார்தாரருக்கு கட்டத்தவறினால் மனு தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 18.06.2024.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து 2024–ம் ஆண்டு ஜீன் திங்கள் 10–ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T MALATHI
Digitally signed by T MALATHI
Date: 2024.06.10 18:47:36 +0530

நீதித்துறை நடுவர்,
குமாரபாளையம்.

//உண்மை நகல்//